# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044-22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.

**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

**முறையீட்டு மனு எண். 17 / மா / 2018**

**ஆணை நாள்: 14.03.2019**

திரு. எஸ். தங்கவேலு,
திருச்சிராப்பள்ளி – 2. – முறையீட்டு மனுதாரர்

திரு. என். இராஜமாணிக்கம்,
உதவி வருவாய் அலுவலர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, சின்னக்கடை வீதி (கிழக்கு), கதவு எண். 6/6 என்ற முகவரியில் வசிக்கும் திரு. எஸ். தங்கவேலு என்பவரது 25.01.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.01.2018 அன்று பெறப்பட்டு 17/2018 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் விசாரணையின் போது அளித்த வாக்குமூலம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் தனி அலுவலர் மற்றும் ஆணையர் மற்றும் ஸ்ரீரங்கம் கோட்டம் உதவி ஆணையரின் அறிக்கைகள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை:</u>**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, சின்னக்கடை வீதி (கிழக்கு), கதவு எண். 6/6 என்ற முகவரியில் வசிக்கும் திரு. எஸ். தங்கவேலு என்பவர் தனது 25.01.2018 நாளிட்ட முறையீட்டு மனுவில் மேற்படி முகவரியில் உள்ள சொத்தில் 'B' ஷெட்யூலில் கண்டுள்ள 1008 சதுர அடி மனை தனக்கு உரிமையானது என்று திருச்சிராப்பள்ளி, இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.963/2008ல் தீர்ப்பு வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் 3ம் எண். சார் பதிவாளர் அலுவலகத்தில் தனது பாக சொத்து பதிவு செய்து, வில்லங்க சான்றும் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் இதுநாள்வரை மேற்படி சொத்திற்கு வரிகள் விதிக்கப்படவில்லை எனவும், அதற்கு ஸ்ரீரங்கம் கோட்டம் உதவி ஆணையர் அலுவலகத்தில் முக்கிய பொறுப்பில் உள்ளவர் ஒருவர்

தனக்கு எதிராக செயல்பட்டு வருவதாகவும், அவரது பெயரினை விசாரணையின் போது நேரில் தெரிவிப்பதாகவும், மேலும் இச்செயலுக்கு ஸ்ரீரங்கம் கோட்டம் உதவி வருவாய் அலுவலர் திரு. N. இராசமாணிக்கம் உடந்தையாக உள்ளார் என்றும், அவர் மீது உள்ள புகார் பட்டியல் அரசியல் அதிர்வு பத்திரிக்கையில் வெளிவந்துள்ளது என்றும், இவர் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தன்னிடம் ரூ.3000/- லஞ்சம் கேட்டு தான் தரவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு 02.02.2018 நாளிட்ட அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் 11.5.2018 நாளிட்ட தனது அறிக்கையில், திரு. எஸ் தங்கவேலு என்பவரது சொத்து வரி விதிப்பு மற்றும் குடிநீர் வரி வதிப்பு பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக புகார்தாரரின் சகோதரின் மனைவியான திருமதி. தெய்வாம்பாள் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு என்.O.S No.468/2013 மற்றும் புகார்தாரர் திரு. எஸ். தங்கவேலு என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்டுள்ள வழக்கு W.P.No.2864/2018 ஆகியவை நிலுவையில் இருந்து வருவதாக தெரிவித்துள்ளார். மேலும், முறையீட்டு மனுதாரரால், திரு. இராசமாணிக்கம், உதவி வருவாய் அலுவலர் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து ஸ்ரீரங்கம் கோட்ட உதவி ஆணையர் விசாரணை செய்து அறிக்கை அளித்துள்ளார் என்றும், அவரது அறிக்கையில் திரு. இராசமாணிக்கம் உதவி வருவாய் அலுவலர் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் ஆதாரங்கள் ஏதும் தெரிவிக்காமல் கற்பனையாக குறிப்பிட்டுள்ளதால், மேற்கண்ட பத்திரிகை செய்தியில் கூறப்பட்டுள்ள புகார்களை நிராகரித்து இது தொடர்பான நடவடிக்கையினை கைவிடலாமென தெரிவித்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 03.09.2018 நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி சொத்து தொடர்பான வழக்குகள் ஏதும் நிலுவையில் உள்ளதா என அறிக்கை அனுப்ப திருச்சி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்ட உதவி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. ஸ்ரீரங்கம் கோட்ட உதவி ஆணையர் 17.10.2018 நாளிட்ட தனது அறிக்கையில் சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையின் வழக்கு எண்.W.P.No 7893/2018 மீது வழங்கப்பட்ட தீர்ப்புரையின்படி திரு. எஸ். தங்கவேலு மற்றும் எதிர்தரப்பினர் திருமதி. L. தெய்வாம்பாள், திரு.L.பாலன், திரு. L.மணிகண்டன் மற்றும் திரு. ஏகாம்பரம் ஆகியோரை உதவி ஆணையர் அலுவலகத்தில் மேற்படி பொருள் குறித்து விசாரணை செய்யப்பட்டதில் மேற்படி சொத்தின் பதிவு செய்யப்படாத

பாகப் பிரிவினை பத்திரத்தின் மீது தற்சமயம் வழக்குகள் நிலுவையில் இருந்து வருவது தெரிய வருகின்றது என்றும், வழக்கு எண்.468/2013 திருச்சி மாவட்ட மூன்றாவது கூடுதல் உரிமையில் நீதிமன்றத்திலும், வழக்கு எண்.817/2018 திருச்சி மாவட்ட கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்திலும், வழக்கு எண்.732/2018ல் மேற்படி சொத்தின் மீது எந்தவித மேல் நடவடிக்கையும் தொடரக்கூடாது என உறுத்துக்கட்டளை வழங்ககோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி சொத்தின் உரிமை குறித்து பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை பத்திரத்தின் மீது வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி நிலுவையில் உள்ள வழக்குகளின் மீது தீர்ப்புரை வரப்பெற்றவுடன் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதுவரை தற்போதய வீட்டுவரி பெயரிலேயே தொடரும் என மனுதாரரின் கோரிக்கையை நிராகரித்து உதவி ஆணையர், ஸ்ரீரங்கம் கோட்டம், செயல் முறை உத்தரவு ந.க.எண்.7353/2018/அ5 நாள்:5.10.2018ன்படி மனுதாரருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 19.6.2018 தேதியிட்ட அழைப்பாணையின்படி முறையிட்டு மனுதாரர் 23.8.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி தனது விளக்கத்தினை அளிக்க ஆணையிடப்பட்டது. 23.8.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் திருச்சி-2, சின்னக்கடை வீதி (கிழக்கு), எண்-6ல் உள்ள வீடு சம்மந்தமாக திருச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 963/2008ன்படி தனக்கும், தன்னுடைய சகோதரர்களுக்கும் வழக்கு நடைபெற்று 31.10.2011 அன்று வழங்கப்பட தீர்ப்பில் 'B' ஷெட்யூலில் உள்ள சொத்து தனக்கு உரிமையானது என்று விளம்புகை செய்யப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய ஆணையருக்கு கடிதம் மூலம் தெரிவித்தும் நேரிலும் சென்று தெரிவித்தததாகவும், ஆணையர், உதவி வருவாய் அலுவலர் திரு. இராசமாணிக்கத்தை பார்க்க சொன்னதாகவும், அவர் மூவாயிரம் ரூபாய் லஞ்சம் கேட்டார் என்றும், பெயர் மாற்றம் செய்யப்படாத நிலையில் சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் வழக்கு எண்.W.P.MD No.7893/2018ன்படி வழக்கு தொடர்ந்து அதன்படி வழங்கப்பட்ட தீர்ப்பில் ஆறு வாரத்திற்குள் முடிவு செய்ய ஆணையிடப்பட்டது என்றும், தனது கோரிக்கை பரிசீலிக்கப்படாத நிலையில், சொத்து மற்றும் குடிநீர் இணைப்பு வரி தன் பெயருக்கு மாற்றம் செய்ய வேண்டும் என்றும் இது தொடர்பான வழக்கு ஏதும் நிலுவையில் இல்லை என்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் ஸ்ரீரங்கம் கோட்ட உதவி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் மனுதாரர் விசாரணையின் போது அளித்த வாக்கு மூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள வீட்டிற்கான சொத்து வரியை மனுதாரரின் பெயரில் மாற்றம் செய்வதற்கு எதிராக மனுதாரரின் சகோதாரின் மனைவி வழக்கு தொடுத்துள்ளார். வழக்கு நிலுவையில் உள்ளது. மேலும் இச்சொத்து சார்ந்த இரண்டு வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. 2014-ஆம் ஆண்டு தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b)ன் கீழ் நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனினும் இம்முறைமன்ற நடுவம் விசாரணை மேற்கொண்டு எந்தவொரு ஆணையும் பிறப்பிக்க இயலாது. நீதிமன்ற தீர்ப்பு வழங்கியவுடன் தீர்ப்பின் அடிப்படையில் உரிய நடவடிக்கையை ஸ்ரீரங்கம் கோட்ட உதவி ஆணையர் மேற்கொள்ளவும், முறையீட்டு மனுதாரரின் சகோதரரின் துணைவியார் திருமதி எல். தெய்வாம்பாள் மாநகராட்சி சட்ட விதி முறைகளுக்கு மாறாக குடிநீர் இணைப்பினைப் பெற்று பயன்படுத்தி வருவாரேயானால் சட்ட விதிகளுக்குட்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. எஸ். தங்கவேலு,
   6/6, சின்னக்கடை வீதி கிழக்கு,
   திருச்சிராப்பள்ளி – 2.
2. உதவி ஆணையர்,
   ஸ்ரீரங்கம் கோட்டம்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.
3. ஆணையர்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி-1

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
செயலரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3 / இ. கோ. / உதரி